**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.20/2020**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : துரைராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(04.08.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புல்லலக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு பேருந்து ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. கடந்த 30.04.2019 அன்று சுமார் 4.15 மணிக்கு எனது பேருந்தில் 60 பேர் பயணிகள் இருந்தனர். அப்போது திடீரென்று அனைவரும் சத்தம் போடவும் என்னவென்று கேட்டேன். அப்போது பஸ்ஸில் இருந்த சிலர் ஒரு பெண் மீது கை வைத்ததாக சொல்லி பேருந்தை காவல் நிலையத்திற்கு விடும்படி கேட்டார்கள். அதன் படி பேருந்தை காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரையும் எதிரியையும் விட்டுவிட்டு நான் பேருந்தை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டேன். நான் திரும்ப வரும் வழியில் காவல் நிலையத்தில் இருந்த காவலர்கள் என்னை விசாரித்தனர். காவல் நிலையத்தில் நடந்த சம்பவம் குறித்து சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன நடந்தது என்ன என்பது எனக்கு எதுவும் தெரியாது. நான் போலிசார் விசாரணையில் மொச்சிக்குளம் கிராமத்தை சார்ந்த முருகன் மற்றும் குராயூரை சார்ந்த சிதம்பரம் ஆகியோர்கள்சேர்ந்து கண்டித்தார்கள். அவன் உடனே பேருந்தில் இருந்து இறங்கி சென்றார் என்று சொன்னேன். எந்த இடத்தில் இறங்கி சென்றார் என்று எனக்கு தெரியாது. யார் இந்த சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது எனக்கு தெரியாது. சம்பந்தப்பட்ட நபர்களை நான் பார்க்கவில்லை. சம்பவத்தில் ஈடுபட்ட நபர் யார் என்பதும் அவர் பெயரும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கும்போது ஆஜர் எதிரியின் பெயரையோ ஊரையோ நான் சொல்லவில்லை. நான் போலிசார் விசாரணையின் போது கள்ளிக்குடி காவல் நிலையத்தில் வாகனத்தை நிறுத்தியதாக வாக்குமூலம் அளிக்கவில்லை ஆனால் நான் நிறுத்தினேன்.

**மறுவிசாரணை**. இல்லை